பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 04 வியாழக்கிழமை 21.10.2021 கதிர் 213

## வீட்டினுள் யுவதி சடலமாக மீட்பு

வீடொன்றிலிருந்து 24 வயது யுவதியின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டம், பலாங்கொடை பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்தே குறித்த யுவதியின் சடலத்தை பலாங்கொடைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ☞2

## சஜித்துக்கு அரசு சவால்

முடிந்தால் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வாருங்கள். அரசின் பலத்தைக் காட்டுகின்றோம்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு சவால் விடுத்துள்ளார் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன. ☞2

## தம்பி படுகொலை; அண்ணன் கைது!

கொழும்பு, கிராண்ட்பாஸ், கஜீமா தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

26 வயதுடைய நபரே இன்று இவ்வாறு கொலை செய்யப்பட்டார் எனக் கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

# நாடாளுமன்றத்தில் கோட்டா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இன்று முற்பகல், நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதியை, சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், நாலக்க கொடஹேவா, காஞ்சன விஜேசேகர, அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இசுரு தொடங்கொட ஆகியோர் வரவேற்றனர்.

அரச தரப்பு நாடாளுமன்ற ☞2

## மின்னல் தாக்கி சிறுமி மரணம்!

மின்னல் தாக்கி 12 வயது சிறுமி ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் மாவட்டம், மஹவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பன்வெள, பலல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் சீரற்ற காலநிலை நிலவி வந்த நிலையில், சிறுமி தனது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த போது மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார்.

எரிகாயங்களுடன் நாகொல்லாகம வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது சிறுமி உயிரிழந்துள்ளார். ☞2

# லொஹான் மீது குற்ற நடவடிக்கை கைதிகளுக்கு பாதுகாப்பான சிறை

## உயர்நீதிமன்று இன்று அதிரடி உத்தரவு அடிப்படை உரிமை மீறல் மனுவும் ஏற்பு

(ந.லோகதயாளன்)



அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அவர்கள் தமக்குப் பாதுகாப்பானது எனக் கருதும் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்ய உயர் நீதிமன்றம் இன்று கட்டளை வழங்கியுள்ளது. அத்தோடு அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைகளை உரிய முறையில் எடுத்து, சட்ட மா அதிபரின் உரிய கலந்தாலோசனையுடன், அவ்விடயங்களின் விவரங்களை உயர்நீதிமன்றத்துக்கும் தெரியப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ☞2

## சீனியின் விலை மீண்டும் உயர்வு

நாட்டின் பல பகுதிகளில் சீனியின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது என வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அரசு சீனிக்கு கட்டுப்பாட்டு விலை விதித்துள்ளபோதிலும் சந்தையில் அது கடைப்பிடிக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் சீனித் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ☞2

## அரிசியின் விலையும் மீண்டும் அதிகரிப்பு

கீரி சம்பா அரிசி ஒரு கிலோவை 30 ரூபாவாலும், நாட்டரிசியை 15 ரூபாவாலும் அதிகரிக்க பொலன்னறுவை பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த விலை அதிகரிப்புக்கேற்ப கீரி சம்பா ஒரு கிலோ 195 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 155 ரூபாவாகவும், நாட்டரிசி ஒரு கிலோ 130 ரூபாவாகவும் சந்தையில் விற்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் வெள்ளைப் பச்சை அரிசி ஒரு கிலோ 120 ரூபாவாகவும், சிவப்புப் பச்சை அரிசி ஒரு கிலோ 105 ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. ☞2

## ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்



இலங்கையில் ஆறு குழந்தைகளின் பிறப்பு இன்று அதிகாலை கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் பதிவாகியுள்ளது.

இன்று அதிகாலை 12.16 முதல் 12.18 வரை சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகள் பிறந்தன.

31 வயது பெண் ஒருவர் 3 பெண் குழந்தைகளையும், 3 ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளார்.

ஆறு குழந்தைகளும் அவர்களின் தாயும் நலமுடன் ☞2

## வடக்கு மாகாணத்தின் நிலைவரம் சம்பந்தமாக முப்படையினருடன் ஆளுநர் கலந்துரையாடல்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள ஜீவன் தியாகராஜா முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து மாகாணத்தின் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார். ☞2

### வீட்டினுள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்பனான, கந்தளாய்பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி தனது நண்பரின் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக, பலாங்கொடை வைத்தியசாலையின் ஆதார வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பலாங்கொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சஜித்துக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், விவசாயிகளைப் பயன்படுத்தி எதிரணிகள் போராட்டம் நடத்துகின்றன எனவும், இதன் பின்னணியில் முழுமையாக அரசியலே இருக்கின்றது எனவும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, நாட்டை மீண்டும் 1988 - 1989 யுகத்தை நோக்கி அழைத்துச் செல்வதற்கு சிலர் முற்படுகின்றனர் எனவும் ஜே.வி.பியினரை மறைமுகமாகச் சாடியுள்ளார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ.

### தம்பி படுகொலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர்கள் இருவருக்கு இடையில் இடம்பெற்ற பணப்பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் 28 வயதுடைய சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### நாடாளுமன்றத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்தார்.

ஜனாதிபதி சபைக்குள் பிரவேசிக்கும் போது, நிலையியல் கட்டளை 27/2இன் கீழ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் வாய்மூல கேள்விகளுக்கு, அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண ஆகியோர் அளித்த பதில்களை, ஜனாதிபதி செவிமடுத்துக்கொண்டிருந்தார்.

### லொஹான் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை இன்று பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுள்ளமையுடன் மேற்படி இடைக்காலக் கட்டளைகளையும் பிறப்பித்தது.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அப்போதைய சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழங்காலில் மண்டியிடச் செய்து, தலையில் கைத் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் காமினி அமரசேகர, யஸந்த கோட்டா கொட, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் மனுதாரர்களின் திருத்தப்பட்ட சத்தியப்பிரமாணப் பத்திரங்களின் அடிப்படையில் அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராகச் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் அரசமைப்பின் 11 ஆவது பிரிவின் கீழ் முன் வைக்கப்படுகின்றமையால் அவர்கள் இருவர் சார்பிலும் சட்ட மா அதிபரின் பிரதிநிதிகள் எவரும் மன்றில் முன்னிலையாக மாட்டார்கள் என சட்ட மா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மனுவைப் பரிசீலித்த நீதியரசர்கள், அரசமைப்பின் 11 ஆம் பிரிவின் கீழான சித்திரவதைக்கு எதிரான சுதந்திரம், 12(1) ஆம் பிரிவின் கீழான சமத்துவமாக நடத்தப்படுவதற்கான உரிமை மற்றும் 12(2) ஆம் பிரிவின் கீழான இன, மத, மொழி, சாதி, பாலினம், அரசியல் நிலைப்பாடு, பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படாமல் இருப்பதற்கான் உரிமை ஆகிய பிரிவுகளின் கீழ் மனுவை விசாரணைக்கு ஏற்கின்றனர் என அறிவித்தனர்.

மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளின் கோரிக்கைகளை விரிவாக ஆராய்ந்த நீதியரசர்கள், அநுராதபுரம் சிறைச்சாலையில் உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கிய தடுப்புக் காவல் கைதிகளை அவர்கள் விரும்பினால், விரும்பிக் கோரும் சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் அல்லது அநுராதபுரத்தில் இருக்க சம்மதம் தெரிவித்தால் அங்கே இருக்க முடியும் எனவும் பணித்தனர்.

இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் குற்றவியல் நடவடிக்கைகளை ஆரம்பித்து, விரிவான அறிக்கை பெற்று மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், த. ஜெயசிங்கம் ஆகியோர் முன்னிலையாயினர்.

சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ரஜீவ குணதிலக முன்னிலையானார்.

### அரிசியின் விலையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் பொலன்னறுவையில் இருந்து சந்தைக்கு அரிசி விநியோகிப்பதில் பின்னடைவு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### சீனியின் விலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, அரசின் தலையீட்டுடன் சீனி விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

### வடக்கு மாகாணத்தின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொலிஸ் நிலையத்துக்கு இன்று காலை வருகை தந்த ஆளுநர் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள், செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் நீண்ட நேரம் இதன்போது ஆராயப்பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிக்கக்கார, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், கடற்படை, விமானப் படை, இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆளுநர் ஆராய்ந்தார்.

### ஒரே பிரசவத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றார் எனவும், குழந்தைகளின் பெற்றோர் கொழும்பில் வசிப்பவர்கள் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல்தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது

மகப்பேற்று பிரசவத்தில் ஈடுபட்ட மருத்துவப் பணிக்குழாமினர் மகிழ்ச்சியுடன் இருக்கின்றமையைப் படத்தில் காணலாம்.

### மின்னல் தாக்கி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனைக்காக நாகொல்லாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்புக்கு 20 வயது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இன்றுடன் 20 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதன் இன்றைய நிலைமை குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திப்பது பொருத்தமானது.

2001 ஒக்ரோபரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது ஒரு வரலாற்றின் பிறப்பாக்கம்தான். ஆனால், அது, அன்று உருவாக்கிய நோக்கத்திலும் தெளிவிலும் இன்று இல்லை என்பதும் வெளிப்படையானது.

காலநதி எப்போதும் ஒரு சீராக ஒரே திசையில் ஓடுவதில்லை. அது, அவ்வப்போது திசைகளை மாற்றிக் கொள்ளும். நாமும் அதற்கேற்ப பயணப் பாதைகளை மாற்றிக் கொண்டேயாக வேண்டும். அது தவிர்க்க முடியாத கட்டாயம். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் கூட அதுதான் நிலைமை. வரலாற்றுக் கட்டாயம் என்ற சுக்கான் அதன் பாதைகளையும் திசைகளையும் திருப்பிக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்கேற்ப கூட்டமைப்பு நேர்த்தியாகவும் ஒழுங்கான முறையிலும் பயணிக்கின்றதா என்பதுதான் கேள்வி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்தாபகக் கட்சிகள் முறையே தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவைதான். நான்குமே தனித்தனியாகவே பதிவு செய்யப்பட்ட கட்சிகளே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டபூர்வ அந்தஸ்தை நீதிமன்றம் மூலம் வளைத்துப் பிடித்துக் கைக்குள் போட்டுக் கொண்ட ஆனந்தசங்கரி அதை வைத்துக்கொண்டு பண்ணிய திருவிளையாடல்களினால் கூட்டணியினர் எல்லோரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பெயரில் கூட்டமைப்புக்குள் பயணிக்க வேண்டியவர்களானார்கள். அன்று முதல் தமிழரசே கூட்டமைப்புக்குள் பிரதான கட்சியாக அங்கம் வகிக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எழுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து – அது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து – இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு தமிழீழம் என்ற ஒரு தன்னாட்சி மாநிலத்தில் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வந்தது. கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் தீர்வுக்காக புலிகளுடன் இலங்கை அரசு நேரடிப் பேச்சு நடத்துவதை ஆதரித்தது. இவ்விடயத்தில் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று பகிரங்கமாக அங்கீகரிக்கும் நிலைப்பாடு வரை அது சென்றது. எனினும் 2009இல் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்து, யுத்தம் முடிவுக்கு வந்ததை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது தனியரசுக் கோரிக்கையை கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டது. சமஷ்டி அடிப்படையிலான பிராந்திய சுயாட்சியை ஏற்கத் தயாராக இருப்பதாக அது அறிவித்தது.

காலச்சக்கரம் விட்டு வைத்த பாதையூடாகத்தான் பயணிக்க முடியும் என்பது அப்பட்டமான – நிதர்சனமான – யதார்த்தப் புற உண்மை. கூட்டமைப்பைப் பொறுத்தவரை அதன் நிலைப்பாடுகள், கொள்கைகள், போக்குகள் செல்நெறிகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவைதான். வரலாறு கையளித்த பாத்திரத்தைத்தான் கூட்டமைப்பினர் வகிக்க முடியும், வகிக்கின்றார்கள். ஆனால் அந்தப் பாத்திரத்தை அவர் செவ்வனே ஆற்றுகின்றார்களா என்பதுதான் கேள்வி.

எல்லா முயற்சிகளும் வெற்றி அளிக்கும் என்று கூறமுடியாது. முப்பது ஆண்டுகளாக அளவற்ற தியாகத்தாலும், சொற்களுக்குள் அடக்க முடியாத உயரிய ஈகத்தாலும் புலிகள் கட்டி வளர்த்த போராட்டம் அடியோடு அழிந்துவிடவில்லையா? அது தவிர்க்க முடியாத யதார்த்தமாகிவிட்டது. ஆனால் அந்த போராட்டத்தை முழுப்பற்றுறுதியுடனும் திடசங்கற்பத்துடனும் உயரிய நெறியிலும் அவர்கள் முன் எடுத்தார்களா என்பதுதான் கேள்வி.


அதே போன்ற கேள்விதான் இந்த 20 ஆண்டு கால முடிவில் கூட்டமைப்பினரை நோக்கி கேட்க வேண்டியதாக உள்ளது.

ஸ்தாபகத்திலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். எதுவும் இப்போது கூட்டமைப்பில் இல்லை. புதிதாக புளொட் நுழைந்துள்ளது.

இதற்கு அப்பால் இந்த இருபது ஆண்டு காலத்தில் – குறிப்பாக யுத்தத்தின் முடிவில் பின்னான 12 ஆண்டுகளில் – அது சாதித்ததென்ன? – காலங்காலமாகச் சிலருக்கு பதவிகள், பவிசுகளைப் பெற்றுத் தந்தமையைத் தவிர. அதற்கு அப்பால் அது சிலவற்றை சாதித்தது என்றால், அதுவும் கூட கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில தனிப்பட்ட மனிதர்களின் அதீத முயற்சியன்றி ஒட்டுமொத்தக் கூட்டமைப்பின் பெறுபேறுகள் அல்ல. இதுதான் கூட்டமைப்பின் இன்றைய நிலைமை.

# எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

## ரணில் விக்கிரமசிங்க உறுதி



எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும் என அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய அலைபேசி செயலியொன்றை அறிமுகம் செய்யும் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

டிஜிற்றல் கட்சி உறுப்புரிமையை அறிமுகம் செய்யும் முதல் கட்சியாக நாம் செயற்படுகின்றோம். நாளையை கட்டியெழுப்பும் கட்சியே எமது கட்சி. எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் 2003 ஆம் ஆண்டு நாட்டில் அரிசியில் தன்னிறைவை ஏற்படுத்தினேன்.

சுவசெரிய நோயாளர் அம்புலன்ஸ் அறிமுகம் செய்தேன். நாம் சிலவற்றை தூர நோக்குடன் செய்தோம் ஏனையோருக்கு இது புரியவில்லை. மாணவர்களுக்கு ரப் கொடுக்க முயற்சித்த போது உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு வெளிப்பட்டது.

பிள்ளைகள் மலட்டுத்தன்மையை அடைவார்கள் எனக் கூறினார்கள். இன்று மாணவர்களின் கல்வி மலடாகியுள்ளது. நாம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அளவிற்கு தோல்வியடைந்துள்ளோம்.

எனினும் நாட்டைக் கட்டியெழுப்பும் சக்தி எம்மிடம் மட்டுமே உள்ளது என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

# வடமேல் ஆளுநரின் கருத்துக்கு ஆசிரியர்கள் சங்கம் எதிர்ப்பு



பாடசாலைகளில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடாத ஆசிரியர்களின் சம்பளத்தை குறைப்பதாக வடமேல் ஆளுநர் தெரிவித்துள்ள கருத்துக்கு ஆசிரியர் சங்கம் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று (புதன்கிழமை) பல்வேறு ஊடகவியலாளர் சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது கருத்து தெரிவித்த குருணாகல் மாவட்ட ஆசிரியர் சங்க தலைவர் சரத் பிரேமசிறி, முடிந்தால் அதிபர் – ஆசிரியர்களின் சம்பளத்தை குறைத்துக் காட்டுமாறு சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பளத்தை குறைக்க விடப்போவதில்லை என ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# இந்திய – தமிழீழ உறவைச் சிதைக்கும் நோக்கில் இலங்கை அரசின் சூழ்ச்சி!

## காசி ஆனந்தன் சீற்றம்



இந்திய அரசுக்கும், தமிழீழ மக்களுக்கும் இடையில் உள்ள நட்புறவைச் சிதைத்தழிக்கும் நோக்கோடு தமிழ் நாட்டு மீனவர்களையும், தமிழீழ மீனவர்களையும் மோதவிடும் சூழ்ச்சியில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளதாக ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் காசி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய – தமிழீழ உறவைச் சிதைக்கும் இலங்கை அரசின் சூழ்ச்சி! மீனுக்கு அல்ல – மீனவருக்குத் தூண்டில் போடும் கொடுமை! 'தமிழினத்தை அழிக்கும் சிங்கள அரசுக்குத் துணை போகலாமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

# இலங்கையில் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு கொவிட்டுக்குள்ளானால் சட்ட நடவடிக்கையாம்

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி சுற்றுலாப் பயணம் மேற்கொண்டவர்கள் கொவிட் தொற்றுக்குள்ளானால் அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் சட்டத்தை மீறி சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் நபர்கள் தொடர்பில் தகவல் கிடைத்து வருவதாக சங்கத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் ஹோட்டல் அறைகள் அனைத்தும் நிறைந்து காணப்படுகின்றன எனத் தகவல் கிடைத்துள்ளதென சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார். சுகாதார ஆலோசனைகளை பின்பற்றாமல் செயற்படும் நபர்கள் சிறு பிள்ளைகள் உட்பட உரிய முறையில் முகக்கவசம் அணியாமல் பயணிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தவறான முறையில் செயற்படும் முறைமை மற்றுமொரு கொவிட் அலைக்கு ஏற்பாடு செய்யும் நடவடிக்கை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனக்கென சமூக வலைத்தளத்தை தொடங்கினார் டொனால்ட் ட்ரம்ப்!




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனக்கென பிரத்யேக சமூக வலைத்தளத்தை தொடங்கியுள்ளார்.

சமூக ஊடகங்களில் இருந்து ட்ரம்ப் வெளியேற்றப்பட்டு 9 மாதங்களுக்குப் பிறகு, 'உண்மை சமூகம்' (ட்ரூத் சோஷியல்) என்ற பெயரில் தனக்கென பிரத்யேக சமூக வலைதளத்தை நேற்று (புதன்கிழமை) தொடங்கினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'நான் ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தைத் தொடங்கியுள்ளேன். பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் அடாவடித்தனத்துக்கு சவால்விடும் வகையில் இதனைத் தொடங்கியுள்ளேன்.

சமூக வலைதளங்களில் தலிபான்கள் அதிகளவில் இருக்கின்றனர். ஆனால் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிக்கு இடமில்லை. நான் ப்ளாக் செய்யப்பட்டேன். இது ஏற்புடையதல்ல' என்று கூறினார்.

அடுத்த மாதம் தொடக்கத்தில் நாடு முழுவதும் இந்த செயலி அறிமுகப்படுத்தப்படும் என்றும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், செய்திகள் கொண்ட வீடியோ சேவையை வெளியிட திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக அப்போது ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப், குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் நாடாளுமன்றக் கலவரத்தை தூண்டினார் எனக் கூறி, டுவிட்டர், பேஸ்புக் நிறுவனங்கள் அவரது கணக்கை நிரந்தரமாக முடக்கியமை குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் மைக்கேல் ஸ்லேட்டர் நேற்று கைதாகினார்

குடும்ப வன்முறைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மைக்கேல் ஸ்லேட்டர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் வர்ணனையாளராக தற்போது செயற்பட்டுவரும் 51வயதான மைக்கேல் ஸ்லேட்டர் நேற்று புதன் கிழமை சிட்னியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள நியூ சவுத் வேல்ஸ் பொலிஸார் மேலதிக விவரங் களை வெளியிடவில்லை.



1993 முதல் 2001 வரை ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்த மைக்கேல் ஸ்லேட்டர் 74 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

## வெடிக்கத் தொடங்கியது அசோ எரிமலை

ஜப்பானின் மவுண்ட் அசோ எரிமலை கரும்புகையுடன் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இதுகுறித்து ஜப்பான் ஊடகங்கள் தரப்பில் தெரிவிக்கையில் ஜப்பானின் க்யூ தீவில் அசோ எரிமலை நேற்று (புதன்கிழமை) காலை 11.43 முதல் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து அப்பகுதியிலிருந்து கரும்புகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

எரிமலையை சுற்றி வாழ்பவர்களுக்கு 1 கிலோமீற்றருக்கு சுவாசப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் மக்கள் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிமலை வெடிப்புக் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் ஏதும் வெளிவரவில்லை. புகை அதிகமாக வெளியேறுவதால் சுற்றுலாப் பயணிகளும் க்யூ தீவுப் பகுதியிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

அசோ எரிமலை 2019 ஆம் ஆண்டு வெடித்தது. இந்த நிலையில் மீண்டும் வெடிக்கத் தொடங்கியுள்ளது.



## டமாஸ்கஸில் வெடிகுண்டு தாக்குதல்; 14 பேர் உயிரிழப்பு

மத்திய டமாஸ்கஸில் இராணுவப் பேருந்து மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர் என சிரிய அரசாங்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜிஸ்ர் அல்-ராயிஸ் பாலத்தின் கீழ் சென்றபோது வாகனத்தில் இருந்த இரண்டு வெடிபொருள்கள் வெடித்து சிதறின என சனா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல வருடங்களாக சிரியாவின் தலைநகரில் நடந்த மிக மோசமான குண்டுவெடிப்பு சம்பவம் இது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள இட்லிப் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 11 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த கொடூரமான குற்றத்தைச் செய்த பயங்கரவாதிகள் எங்கிருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் முகமது அல்-ரஹ்மான் கூறினார்.

2011 முதல் அதிபர் பார் அல்-அசாத்தை வீழ்த்த முயற்சித்து வரும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஜிஹாதிஸ்ட் குழுக்களின் இறுதி கோட்டையாக வடமேற்கு சிரியா உள்ளமை குறிப்பிடத்தக்கது

## கூலிப்படையை உருவாக்க முயன்ற முன்னாள் ஜேர்மன் வீரர்கள் கைது



ஜேர்மனின் உள்நாட்டுப் போரில் சண்டையிட பயங்கரவாத கூலிப்படையை உருவாக்க முயன்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு முன்னாள் ஜேர்மன் வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கு ஜேர்மனியில் பொலிஸார் நடத்திய சோதனையை அடுத்து, கைது செய்யப்பட்ட இருவர் மீதும் பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வீரர்களைக் கொண்ட ஒரு தனியார் இராணுவத்திற்கு 150 ஆள்களை நியமிக்க அவர்கள் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது. ஜேர்மனில் சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சவுதி அரேபியா அரசுக்கு அவர்கள் தங்கள் சேவைகளை வழங்க விரும்பினர் என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். சவுதி அரேபியாவின் ஆதரவு பெற்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுக்கும் ஆயுதமேந்திய ஹூதி இயக்கத்துக்கும் இடையே கடந்த 2014 முதல் இடம்பெறும் உள்நாட்டுப் போரில் ஜேர்மன் பாதிக்கப்பட்டுள்ளது.


*Jaffna College Institute of Technology*
*Calls* for the following courses

Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# நாமல் ராஜபக்ஷவை விருந்தினராக அழைத்தமை பச்சைத் துரோகம் பா.ஜ.கவையும் தி.மு.கவையும் அறிக்கை மூலம் சீமான் விளாசல்!



நாமல் ராஜபக்ஷவை விருந்தினராக அழைப்பதா? இதனால், இந்தியப் பெருநாடு வரலாற்றுப் படிப்பினையையும் தமிழர்களின் எதிர்வினையையும் எதிர்கொள்ள நேரிடும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

சீமான் விடுத்துள்ள அறிக்கையில், 'உத்தரப்பிரதேச மாநிலம், குஷி நகரில் வானூர்தி நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வுக்கு 2 லட்சம் தமிழர்களை ஈழத்தில் கொன்றொழித்த நாமல் ராஜபக்ஷவை அழைத்திருந்தமை உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பெரும் கொந்தளிப்பையும் கடும் சினத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளியெனவும் இலங்கைமீது பொருளாதாரத் தடைவிதித்து, அந்நாட்டுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டுமெனவும் கடந்த 2011ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கும் சூழலில், அதனைத் துளியும் மதியாது இலங்கையுடன் நட்புறவு பாராட்டுவதும் சிங்கள ஆட்சியாளர்களை விருந்தினராக உபசரிப்பதும் வன்மையான கண்டனத்திற்குரியது.

இந்தியாவுக்கெதிரான சீனாவுக்கு வாசல் திறந்துவிட்டதோடு மட்டுமல்லாது, 'ஆசியாவின் எழுச்சியை சீனாவால்தான் ஏற்படுத்த முடியும்' எனவெளிப்படையாக நிலைப்பாட்டை எடுத்து சீனாவின் பக்கம் நிற்கும் இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களை பா.ஜ.க. அரசு ஆதரித்து அரவணைப்பது வெட்கக்கேடானது. தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் ராஜ்கிரணை சிங்களக் கடற்படை கொன்றொழித்து முழுமையாக ஒருநாளைக் கூட கடக்காத நிலையில், இரு மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் தற் போதைய சூழலில், துளியும் வெட்கமின்றி அந்த நாட்டு அமைச்சரை அழைத்து உபசரிக்கும் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசின் செயல் ஈனத்தனமான இழி அரசியலாகும். இது வரிசெலுத்தி, வாக்குச்செலுத்தி இந்தியாவைத் தங்கள் நாடென்று கருதிவரும் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பா.ஜ.க. அரசு செய்த பச்சைத்துரோகமாகும்.

தமிழர்களுக்கெதிராக மிகப்பெரும் அநீதி இழைக்கப்படும் வேளையிலும் தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசு, எவ்வித எதிர்வினையுமாற்றாது அமைதிகாப்பது ஏமாற்றத்தைத் தருகிறது.

மாநிலத்தன்னுரிமை, தன்னாட்சி என்றெல்லாம் முழங்கிவிட்டு, ஒன்றிய அரசின் இக்கொடுங்கோல் போக்குக் குறித்து வாய்திறக்கவே முதுகெலும்பற்று நிற்பது அவமானகரமானது. எட்டுக் கோடி தமிழர்களின் விருப்பத்திற்கும், உணர்வுக்கும் மாறாக சிங்களவர்களோடு உறவுகொண்டாடும் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசின் செயல், இந்தியா எனும் ஒட்டு மொத்தக் கட்டமைப்பின் மீதே தமிழ் இளந் தலைமுறையினருக்கு ஆறாத காயத்தையும் பெரும் கோபத்தையும் ஏற்படுத்தும் பேராபத்தாக முடியும்.

தமிழர்களைத் தொடர்ச்சியாகச் சீண்டிவரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் படுபாதகச் செயலினாலும் நயவஞ்சகப்போக்கினாலும் இந்தியப்பெருநாடுவரலாற்றுப் படிப்பினையையும் தமிழர்களின் எதிர்வினையையும் கட்டாயம் எதிர்கொள்ள நேரிடுமென எச்சரிக்கிறேன்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன எல்லையில் படைப் பலத்தை அதிகரிக்கும் இந்தியா மலைப்பகுதிகளில் சிறு ஏவுகணைகள் நிலை நிறுத்தம்



சீனாவை ஒட்டிய எல்லைப் பகுதியில் உள்ள மலைகளில் விமானங்களை வீழ்த்தக்கூடிய அதிநவீன எல். 70 ரக சிறு ஏவுகணைகளை இந்தியா நிலை நிறுத்தியுள்ளது.

இந்திய - சீனப் படைகளுக்கிடையே கடந்த தாண்டு லடாக் பகுதியில் மோதல் மூண்டதிலிருந்து எல்லையில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது. சீனாவும் எல்லையில் தனது படைகளின் எண்ணிக்கையை தொடர்ந்து அதிகரித்து வருவதோடு, இராணுவத்தினரை பயிற்சியிலும் ஈடுபடுத்தி வருகிறது.

இந்தநிலையில் அருணாசலப் பிரதேசத்தில் சீனாவை ஒட்டிய பகுதிகளில் அமைந்துள்ள மலைகளில் எல். 70 ரக அதிநவீன விமான எதிர்ப்பு சிறு ஏவுகணைகளை இந்தியா நிலை நிறுத்தி வைத்திருக்கிறது.

ஏற்கனவே எம். 777 ரக சிறு ஏவுகணைகள், போபர்ஸ் இரக பீரங்கிகளை இந்தியா எல்லையில் நிலை நிறுத்தியுள்ள நிலையில் அவற்றுடன் தற்போது எல் .70 ஏவுகணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. எல்லையில் படைகளின் தயார் நிலை குறித்து இந்திய இராணுவ மற்றும் விமானப் படைத் தளபதிகள் அவ்வப்போது நேரில் ஆய்வு செய்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக எல்லையில் இந்திய இராணுவப் படை பலம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



## ஹிந்தியே தேசிய மொழி என்ற மூடநம்பிக்கை பலரையும் பிடித்தாட்டுவதாக கமல் பதிவு

'ஹிந்தியே தேசிய மொழி என்ற மூட நம்பிக்கை பலரையும் பிடித்தாட் டுகிறது!' என்று நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

'இந்தியா பல மொழிகளின் நாடு. அரசியலமைப்புச் சட்டத்தின்படி, நமக்குத் தேசிய மொழி என்று எதுவும் இல்லை. என்றாலும் ஹிந்தியே தேசிய மொழி என்ற மூடநம்பிக்கை நிறையப்பேரைப்பிடித்தாட்டுகிறது. தெளிவுபடுத்தவேண்டியது நடுவண் அரசின் கடமை' என்று தனது டுவிட்டர் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விகாஷ் என்ற நபர், சொமேட்டோ எனும் உணவு விநியோக நிறுவனத்தில் உணவு ஓடர் செய்தபோது, உணவு முழுமையாக வழங்கப்படாததால் சொமேட்டோவின்வாடிக்கையாளர்மையத்தை அணுகிப் பணத்தைத் திரும்பத்தரு மாறு கேட்டுள்ளார். அப்போது மொழிப் பிரச்சினை இருப்பதாக சொமோட்டோ நிறுவனம் கூறியிருக்கிறது. தமிழ்நாட்டில் சேவை வழங்கும் நீங்கள் தமிழ் மொழி தெரிந்தவர்களைப் பணிக்கு அமர்த்தியிருக்க வேண்டும் என விகாஷ் வாதாட, ஹிந்தி இந்த நாட்டின் தேசிய மொழி. இந்தியர்கள் அனைவரும் ஹிந்தி மொழி தெரிந்து வைத்திருக்க வேண்டும் என சொமேட்டோ நிறுவனம் பதில் அளித்துள்ளது. இந்தவிடயம் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு சர்ச்சையை ஏற்படுத்தியது. சொமேட்டோவின் செயலுக்கு பிரபலங்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் என பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த விடயம் குறித்தே கமல்ஹாசனும் தனது எண்ணத்தை டுவிட்டரில் பகிர்ந்திருக்கிறார்.



## இந்தியாவில் ஒரேநாளில் 18,454 பேருக்கு கொரோனா உறுதி 100 கோடி தடுப்பூசிகள் செலுத்திய சாதனையை படைத்தது

இந்தியாவில் ஒரேநாளில் 18,454 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.

இரு தினங்களுக்கு முன்னர் 13,058 ஆகவும், மறுநாள் 14,623 எனவும் பதிவான நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் 18,454 பேருக்கு பாதிப்பு உறுதியாகியிருக்கிறது. இதையடுத்து இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு மொத்த எண்ணிக்கை 3,41,08,996 இலிருந்து 3,41,27,450 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்த ஒரேநாளில் கொரோனாவுக்கு 160 பேர் உயிரிழந்துள்ளதையடுத்து கொரோனாவால் இறந்தோர் எண்ணிக்கை 4,52,651இலிருந்து 4,52,811ஆக உயர்ந்திருக்கிறது என்றும் தரவுகள் தெரிவித்துள்ளன.

இதனிடையே 100 கோடி கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்தி சாதனை படைத்த நாடு என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது. தடுப்பூசி செலுத்தியதில் உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்கள் முதல் 5 இடங்களில் உள்ளன. மக்கள்தொகை அடிப்படையில் அதிகளவு முதல் தவணைத் தடுப்பூசி செலுத்தி உத்தராகண்ட் சாதனை படைத்திருக்கிறது.

ஜனவரி 16 முதல் தடுப்பூசி போடுவது ஆரம்பித்த நிலையில் 9 மாதங்களில் 100 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 5 கோடிக்கும் அதிகமான கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாணத்தில்

# 200 மாணவர்களுக்கு குறைந்த 568 பாடசாலைகள் இன்று திறப்பு

கொரோனா நீண்ட விடுமுறையின்பின்பு, கிழக்கில் இன்று வியாழக்கிழமை 568 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன. இன்று அதிபர்யாராவது லீவு அறிவித்தால், அவர் பாடசாலைத் திறப்பையும் ஆவணங்களையும் அந்தந்த வலயக்கல்விப்பணிமனையில் ஒப்படைக்க வேண்டும் என்று கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளைநாயகம் அறிவித்துள்ளார்.



நேற்று, அவர் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பியுள்ள அவசர அறிவுறுத்தல் கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு ஒப்படைக்கப்படும் திறப்பும், ஆவணங்களும் குறித்த பாடசாலையின் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டு, கோட்டக்கல்விப்பணிப்பாளர் பாடசாலை இன்று மீளத்திறப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு குறைந்த ஆரம்ப வகுப்புக்களைக்கொண்ட 568 பாடசாலைகள் இன்று மீளத்திறக்கப்படுகின்றன.

அதிபர் சமுகமளிக்காத பாடசாலைகளை, அந்தந்த பாடசாலைப்பொறுப்பு மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளர்கள்திறந்துமாணவர்களுக்கான சூழலை ஏற்படுத்தவேண்டும்.

இதுபற்றிய குறிப்பை பாடசாலையின் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் (LogBook) கோட்டக்கல்வி அதிகாரி முன்னிலையில் இணைப்பாளர் முறைப்படி பதியவேண்டும்.

அதிபர் திரும்பும்வரை ,குறித்த இணைப்பாளர் அந்தந்த பாடசாலையின் பாடசாலை அபிவருத்திக்குழுவினர், சுகாதாரக்குழுவினர் மற்றும் பாடசாலை கட்டாயக்கல்விக்குழுவினரோடு கலந்துரையாடி பாடசாலை நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டும்.

பட்டதாரி பயிலுனர்களை பாடசாலையில் இணைத்து ஆசிரியர்கள் சகலவகுப்புகளிலும் இருக்கத்தக்கவாறு நடவடிக்கைகளை வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வவுணதீவில் மதுபானப் போத்தல்களுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது

பூரண தினத்தில் சட்டவிரோதமாக இரு வீடுகளில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட இருவர் 12 போத்தல் மதுபானங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டக்களப்பு வவுணதீவில் வைத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுணதீவுபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து நேற்றுக் காலை நெடுஞ்சேனை பிரதேசத்தில் வெவ்வேறு இரு வீடுகளை பொலிஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட 18 வயதுடைய இளைஞர் ஒருவரை 7 போத்தல் கொண்ட 5,250 மில்லி லீற்றர் மதுபானத்துடனும், 43 வயதுடைய பெண் ஒருவரை 5 போத்தல் கொண்ட 3,750 மில்லி லீற்றர் மதுபானத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நீரில் மூழ்கி காத்தான்குடியில் தந்தையும் பிள்ளைகளும் சாவு

வெல்லவாய எல்லவெல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற தந்தையும் அவரது பிள்ளைகள் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில், காத்தான்குடியைச் சேர்ந்த 35 வயதான தந்தை, அவரது 15 வயது மகன் மற்றும் 9 வயது மகள் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# கடற்கரையில் எடுத்த தங்கச் சங்கிலியொன்றை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சிறுவன்!

மட்டக்களப்பு – களுவன்கேணி கடற்கரையில் சிறுவன் ஒருவன் தனது நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்தவேளை கண்டெடுத்த சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியொன்றை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து சமூகத்திற்கான முன்மாதிரியைக் காண்பித்துள்ளார்.

மட்டக்களப்பு – மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இராசதுரை தனுகரன் என்ற சிறுவன் கண்டெடுத்த தங்கச்சங்கிலியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறுகோரி புதன்கிழமை காலை ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்தவிடம் கையளித்தார்.

இதன்போது பிரதேச கிராம சேவை அதிகாரி வீ. உதயகுமார் மற்றும் சிறுவனின் சின்னம்மா ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

குடும்பத்தின் கடைசியான மூன்றாம் பிள்ளையான இவர் குடும்ப வறுமை நிலைகாரணமாக பாடசாலைக் கல்வியைக் கைவிட்டுள்ளதுடன் இவரின் தாயார் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வீட்டுப்பணிப்பெண்ணாகப் பணியாற்றி வருகிறார்.

இவர்தனது சகநண்பர்களுடன் கடலில் குளித்துக்கொண்டிருந்த வேளை பொன்னிறமான சங்கிலியொன்றைக் கண்டெடுத்துள்ளார்.

அது தங்கமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோதித்து உறுதி செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலையத்தின் ஊடாக உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச்சங்கிலியை எதிர்வரும் 27 ஆம் திகதியன்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தூங்கிக் கொண்டிருந்த யுவதியிடம் வாழைச்சேனையில் சங்கிலி திருட்டு

தூங்கிக் கொண்டிருந்த யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ள சம்பவமொன்று, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – பதுரியா நகரிலுள்ள வீடொன்றில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டார் தூங்கிக் கொண்டிருக்கும் போது, கதவை உடைத்து உள்நுழைந்த திருடன், அலுமாரியில்வைக்கப்பட்டிருந்த 10,000 ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தையும் நகையையும் திருடிவிட்டு, தூங்கிக் கொண்டிருந்த யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு திருட்டில் ஈடுபட்ட திருடன், அலுமாரியில் இருந்த விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசியை திருடாமல் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இத் திருட்டுச் சம்பவத்தை கண்டுபிடிக்க வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கைக்குண்டு வைத்திருந்த நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

*கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன்தீவு பகுதியில் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த நபரை, இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.பி.அன்பர், நேற்று உத்தரவிட்டார்.*

*கிண்ணியா,பூவரசந்தீவு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய முன்னாள் இராணுவ வீரர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவில் சேவையாற்றிய இவர், முறையான அங்கீகாரத்துடன் இராணுவ சேவையில் இருந்து விலகியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*கணவனுக்கும் மனைவிக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ள நிலையில், கணவரான முன்னாள் இராணுவ வீரர், தனது மனைவியை கைக்குண்டை காட்டி பயமுறுத்துவதற்காக பயன்படுத்தியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*சந்தேகநபர் தொடர்பாக கிண்ணியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில்,சந்தேகநபரைகைக்குண்டுடன் கைது செய்து, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.*

# ஹசரங்கவின் அட்டகாசமான துடுப்பாட்டம் சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைந்தது இலங்கை



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தகுதி காண் சுற்றின் நேற்றைய போட்டியில், இலங்கை அணி 70 ஓட்டங்களால் வெற்றிபெற்று சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறியது.

அபுதாபியில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், இலங்கை - அயர்லாந்து அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. வனிந்து ஹசரங்க 71 ஓட்டங்களையும் பத்தும் நிஸங்க 61 ஓட்டங்களையும் எடுத்தனர். அயர்லாந்து அணியின் ஜோசுவா லிட்டில் 4 விக்கெட்டுக்களையும் மார்க் அடயர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய அயர்லாந்து அணி, 18.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 70 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பல்பிரையன் 41 ஓட்டங்களையும் கார்டிஸ் கம்பர் 24 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இலங்கை கிரிக்கெட் அணியின் மஹேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுக்களையும் சம்மிக கருணாரத்ன மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக 71 ஓட்டங்களை எடுத்ததோடு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றிய வனிந்து ஹசரங்க தெரிவானார். இந்த வெற்றியின் மூலமாக ஏ பிரிவில் 4 புள்ளிகளோடு இலங்கை அணி முதலிடத்திலுள்ளது.

# 6 விக்கெட்டுக்களால் நெதர்லாந்தை பணிய வைத்தது நமீபியா அணி

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மற்றொரு தகுதி காண்சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை நமீபியா அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நமீபியா அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இதையடுத்து துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நெதர்லாந்து அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது. மக்ஸ் ஒடவுட் 56 பந்துகளில் 70 ஓட்டங்களையும் கொலின் அகெர்மான் 35 ஓட்டங்களையும் பெற்றனர். நமீபிய அணியின் ஜான் ப்ரைலின்க் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதையடுத்து 165 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி நமீபியா அணி களமிறங்கி, 19 ஓவர்களிலேயே நான்கு விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. அந்த அணியில் அதிகபட்சமாக டேவிட் வைய்ஸ் 66 ஓட்டங்களை நாற்பதே பந்துகளில் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். அணித் தலைவர் ஏரஸ்மஸ் 32 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக நமீபியா அணியின் டேவிட் வைய்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின்மூலம் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பினை நமீபியா அணி தக்கவைத்துக் கொண்டுள்ளது.



# ஸ்கொட்லாந்து தேசிய அணியின் சீருடை வடிவமைத்த 12 வயது பாடசாலைச் சிறுமி!




ரி-20 உலகக் கிண்ணக்கிரிக்கெட் தொடரில் தகுதிகாண் சுற்றின் தனது முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி, அந்த அணி வீரர்கள் அணிந்திருக்கும் சீருடையாலும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.


அந்த சீருடையில் ஊதா மற்றும் கறுப்பு நிறப் பட்டைகளைக் கொண்ட வடிவமைப்புடன், ஸ்கொட்லாந்து நாட்டின் பெயரும் முன் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

கண்களைக்கவரும் வகையில் அமைந்திருக்கும் அந்தச் சீருடையானது கிரிக்கெட் ரசிகர்களால் சிலாகிக்கப்பட்டுவருகிறது.

இந்தச் சீருடையை வடிவமைத்தர் குறித்த சுவாரஸ்யமான தகவலை ஸ்கொட்லாந்து கிரிக்கெட் நிர்வாகம் தற்போது வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஸ்கொட்லாந்து கிரிக்கெட்டின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், அவர்களது சீருடையை வடிவமைத்தவர் ஹெடிங்டனைச் சேர்ந்த ரெபேக்கா டவுனி என்ற 12 வயதுடைய சிறுமி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் நடைபெறும் ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கித் தொடருக்கான அட்டவணை வெளியீடு

16 அணிகள் பங்கேற்கும் ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கித் தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. 12 ஆவது ஜூனியர் ஆண்கள் உலகக் கிண்ண ஹொக்கித் தொடர் இந்தியாவின் ஒடிசா தலைநகர் புவனேசுவரத்தில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் அடுத்த மாதம் 24 ஆம் திகதி முதல் டிசெம்பர் 5 வரை நடைபெறவுள்ளது.




இந்தப் போட்டித்தொடருக்கான அட்டவணையை சர்வதேச ஹொக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது. இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் 16 அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் பெல்ஜியம், சிலி, மலேசியா, தென்னாபிரிக்கா, 'பி' பிரிவில் நடப்பு சம்பியனான இந்தியா, கனடா, பிரான்ஸ், போலந்து, 'சி' பிரிவில் தென் கொரியா, நெதர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்கா, 'டி' பிரிவில் ஆர்ஜென்டீனா, எகிப்து, ஜேர்மனி, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இடம் பிடித்துள்ளன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும்.

ஆரம்ப நாளில் நடைபெறும் லீக் ஆட்டங்களில் பெல்ஜியம்-தென்னாபிரிக்கா, மலேசியா-சிலி, ஜேர்மனி-பாகிஸ்தான், கனடா-போலந்து, இந்தியா-பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதேபோல் தென்னாபிரிக்காவில் டிசெம்பர் 5 ஆம் திகதி முதல் 16 வரை நடைபெறவுள்ள ஜூனியர் பெண்கள் உலகக்கிண்ண ஹொக்கி தொடருக்கான போட்டிக்கான அட்டவணையும் வெளியிடப்பட்டது. இதில் பங்கேற்றுள்ள 16 அணிகளும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

# எண்ணிக்கைக்காக வேறு ஆள்களை நிறுத்த பாடசாலைகள் இராணுவக் காப்பரண்கள் அல்ல!

## ரெலோ கண்டனம்

மக்களின் முதுகெலும்பில் ஒன்றான கல்வியையும் சீரழிக்க முற்படுகிறது அரசு. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கு மாற்றீடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பது என்று அரசாங்கம் அறிவித்திருப்பது நாட்டின் முதுகெலும்பில் ஒன்றான கல்வியையும் சீரழிக்கின்றது என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும் என ரெலோ அமைப்பின் ஊடக பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

ஏற்கனவே கொவிட் தொற்று தடுப்பு நடவடிக்கையால் பாடசாலைகள் காலவரையின்றி மூடப்பட்டு இளைய சமுதாயத்தின் கல்வி பெரிதும் பாதிப்படைந்துள்ளது. நாட்டினுடைய முதுகெலும்பில் ஒன்றான விவசாயத்தை அரசு ஒட்டுமொத்தமாகச் சீரழித்து பஞ்ச நிலைமைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

உர மானியத்தைக் கோரிய விவசாயிகளுக்குப் பதிலை வழங்காது இரசாயன உரத்தை ஒட்டுமொத்தமாகத் தடைசெய்கிறோம் எனத் தவறான அறிவிப்பைச் செய்து இயற்கைப் பசளையைப் பயன்படுத்துமாறு தடாலடியாகக் கூறியதன் பின்விளைவே இதுவாகும்.

சர்வதேச நாடுகளை எடுத்தெறிந்து நடந்து திறைசேரியை வங்குரோத்தாக்கி பிணைமுறிகளை விற்க முடியாமல், அளவு கணக்கில்லாமல் காசு அச்சடிக்கும் நிலைமைக்கு அரசு நாட்டைத்தள்ளியுள்ளது. இந்த அரசு வரலாற்றில் முதல் தடவையாக அந்நியச் செலாவணி இருப்பை துடைத்தெறிந்துள்ளது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீளப்பெறுவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மாற்று வழிகளை யோசிக்கிறோம் என்று மத்திய வங்கி ஆளுநர் உட்பட அரசு வீரவசனம் பேசிக்கொண்டிருக்கிறது.

நாட்டின் இன்னொரு முதுகெலும்பான ஆடை ஏற்றுமதி தொழிலை முடக்குகின்ற அபாய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. தற்போது நாட்டின் முதுகெலும்பில் ஒன்றாகத் திகழ்கின்ற மக்களின் அடிப்படை உரிமையான கல்வியையும் சீரழிக்க அரசாங்கம் முற்பட்டிருக்கிறது.

அதிபர்களும் ஆசிரியர்களும் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஜனநாயக முறைகளைப் பின்பற்றி அரசியல் நோக்கங்களோ கலப்படமோ இல்லாத போராட்டம். இதற்கான தீர்வு பேச்சின் மூலம் எட்டப்படவேண்டும்.

அதை விடுத்து வேறு அரசு அதிகாரிகளை அவர்கள் இடத்துக்கு நியமிப்போம் என்று ஏட்டிக்குப்போட்டியாக நடப்பதென்பது அரசாங்கத்தினுடைய முறை அல்ல என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும். எண்ணிக்கை கணக்குக்காக வேறு ஆள்களை நிறுத்துவதற்குப் பாடசாலைகள் இராணுவக் காப்பரண்கள் அல்ல.

மாறாக நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற சந்ததியை வளர்க்கின்ற கல்விக் கூடங்கள் இதைப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் தான் நடத்த முடியும். விதண்டாவாதப் போக்குகளின் மூலம் ஏற்கனவே நாட்டை அதலபாதாளத்தில் தள்ளி இருக்கும் அரசாங்கம் கல்வியையும் சீரழிக்க முற்படுகின்ற நடவடிக்கையாகவே இதை நாம் நோக்குகிறோம். பதிலீடாக அனுப்பப்படும் அதிகாரிகள் நாளை சம்பள உயர்வு கேட்டால் அவர்களுக்குப் பதிலாக நீங்கள் யாரைக் கொண்டுவரப் போகிறீர்கள் என்ற கேள்வி எழுகிறது. ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான் வழியே தவிர அதற்கான மாற்றீடாக ஆள்களை நிரப்புவது தலைவலியைத் தீர்ப்பதற்குத் தலையணையை மாற்றுவதற்கு ஒப்பாகும். நாட்டின் அரசியல் பிரச்சினைத் தீர்வுக்கு உரியவர்களுடன் பேச்சு நடத்தாமல் விதண்டாவாதமாக இழுத்தடிப்பது போல அல்லாமல் சம்பந்தப்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு மதிப்பளித்து அவர்களோடு பேச்சு நடத்தி இதற்கு ஒரு சுமுகமான முடிவைக் காண்பது நாட்டினுடைய எதிர்கால சந்ததியின் கல்வியைக் காப்பாற்றும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கு வவுனியாவில் பைஸர் தடுப்பூசி

நாடு முழுவதும் இன்று முதல் 18 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் பைஸர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் முதற்கட்டமாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 18 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு மட்டும் பைஸர் கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இன்று முன்னெடுக்கப்படுகின்றது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்று வவுனியா மாவட்டத்தில் 81 பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் சிறுவனைக் காப்பாற்றச் சென்று காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

புத்தளம் மாவட்டம், மாரவில முதுகட்டுவ கடலில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்ற சென்று காணாமல்போன நபர், நேற்று (புதன்கிழமை) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொபேஹின்ன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பிங்கிரிய பகுதியிலிருந்து மாரவில பிரதேசத்துக்கு சுற்றுலா நிமித்தம் வருகை தந்த சிலர், மாரவில முதுகட்டுவ பிரதேசத்திலுள்ள கடலுக்கு நீராடச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது சிறுவன் ஒருவன் கடலில் மூழ்கி திடீரென காணாமல்போனார். இதையடுத்து சிறுவனின் பெற்றோர்கள் கூக்குரலிட்டுள்ளனர். அங்கு நின்றவர்கள் கடலுக்குள் சென்று குறித்த சிறுவனைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும், சில மணிநேரத்தின் பின்னர் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டார்.

சிறுவனை மீட்பதற்காகச் சென்றவர்களில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி காணாமல்போயிருந்தார். இவரைக் கடந்த இரு நாள்களாகத் தேடி வந்த நிலையில், சடலமாக நேற்று அவர் கரையொதுங்கியுள்ளார்.

# கர்ப்பிணி மற்றும் இரு குழந்தைகள் உட்பட 10 பேர் குளவி கொட்டி வைத்தியசாலையில்!

புத்தளம் மாவட்டம், தளுவ பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 10 பேர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் நேற்று (புதன்கிழமை) சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்களில் கர்ப்பிணி ஒருவரும், குழந்தைகள் இருவரும் உள்ளடங்குகின்றனர்.

தென்னை மரத்தில் கூடு கட்டியிருந்த குளவிகள் கலைந்து வந்து மேற்படி பகுதியில் இருந்தவர்கள் மீது கொட்டியுள்ளன.

# முட்டை விலை உயர்வால் நுகர்வோர் நெருக்கடியில்

முட்டை மற்றும் முட்டை ரொட்டியின் விலை உயர்வால் நுகர்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

முட்டையின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர். இந்த சூழ்நிலையில், ஒரு வெள்ளை முட்டை 22 ரூபாவுக்கும், ஒரு சிவப்பு முட்டை 23 ரூபாவுக்கும், ஒரு சிறிய வெள்ளை முட்டை 20 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது.

முட்டையின் விலை அதிகரிப்பால், ஒரு முட்டை ரொட்டியின் விலை 60 முதல் 65 ரூபா வரை இருப்பதாகவும், இந்த சூழ்நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறோம் என நுகர்வோர் கூறுகிறார்கள்.

இந்த நிலையில் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள முட்டை வியாபாரிகள், மொத்த முட்டை விலை உயர்வால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் அண்மைய நாள்களில் சில அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக உயர்ந்துள்ளது. குறிப்பாக சீனி, பால்மா, கோதுமை உள்ளிட்ட பொருள்களில் விலை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு கடத்த இருந்த அரிய வகை கடலட்டைகள் மீட்பு





இலங்கைக்கு கடத்துவதற்காக சட்டவிரோதமாக மீனவர்களால் பிடிக்கப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 2 தொன் கடல் அட்டைகள் பொலிஸ் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இருந்து சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு சமீப காலமாக கடல் அட்டைகள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகின்றன, இதனைத் தடுப்பதற்கு இந்திய – இலங்கை சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர காவல்படை மற்றும் மெரைன் பொலிஸார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக்கு கடத்துவதற்காக சட்டவிரோதமாக மீனவர்களால் பிடிக்கப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 2 தொன் கடல் அட்டைகள் அடுத்தடுத்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மண்டபம் வடக்கு கடற்கரை பகுதியில் செவ்வாய்க்கிழமை தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் நாட்டுப் படகில் வைத்திருக்கப்படுகின்றன எனக் கிடைத்த தகவலையடுத்து ராமேஸ்வரம் மெரைன் ஆய்வாளர் கனகராஜ் தலைமையில் கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது நடுக்கடலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த நாட்டுப் படகை சோதனை செய்தபோது அதில் சுமார் 200 கிலோ கிராம் கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்த நிலையில் கடல் அட்டையும், நாட்டுப் படகையும் பறிமுதல் செய்து அதில் இருந்த ஒருவரையும் கைது செய்தனர்.

அதனைத் தொடர்ந்து சுந்தரம் உடையான் கடற்கரைப் பகுதியில் நாட்டுப்படகில் கடலட்டைகள் இருக்கின்றனஎன இந்திய கடலோர காவல்படையினருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து உடனடியாக நடுக்கடலில் சோதனை செய்ததில் சுமார் 500 கிலோ கிராம் கடல் அட்டைகள் இருந்தமை தெரியவந்தது. உடனடியாக கடல் அட்டை மற்றும் நாட்டுப் படகு பறிமுதல் செய்யப்பட்டன. கடலோர காவல்படை வருவதை அறிந்த நாட்டுப் படகில் இருந்த மூவர் கடலில் குதித்து மாயமாகினர்.

இதைத் தொடர்ந்து நேற்று (புதன்கிழமை) ராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரைப் பகுதியில் சிலர் சட்ட விரோதமாக கடலட்டைகளை பிடித்து காட்டுப் பகுதியில் பதுக்கி வைத்திருக்கின்றனர் என ராமேஸ்வரம் மெரைன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று சோதனை செய்ததில் உயிருடன் கடல் அட்டையையும், அதனை வைத்திருந்த அப்பகுதியைச் சேர்ந்த பூபதி என்பவரை கைது செய்த மெரைன் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.